இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 18-07-2025



# எந்தப் பிரச்சினையைத் தீர்த்தார் பழனிசாமி?

“தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமித்ஷா வீட்டுக் கதவைத் தட்டினேன்” என்று சொல்லி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி. அத்தோடு, எந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து இருக்கிறேன் என்பதைச் சொல்லி இருக்க வேண்டும். அதனை பழனிசாமி சொல்ல வில்லை. அப்படி ஏதாவது இருந்தால்தானே அவரால் சொல்ல முடியும்?

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பரப்புரையை திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்தெந்த வகைகளில் வஞ்சிக்கிறது என்பதை நாட்டு மக்களுக்குச் சொல்லி வருகிறது தி.மு.க.

**தமிழ்நாட்டின் நிதி உரிமைகள், ஜி.எஸ்.டி. கொள்கை மூலமாகப் பறிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் வரி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தரப்படுவது இல்லை. தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் இல்லை. பள்ளிக் கல்விக்கான ரூ.2000 கோடி நிதி மறுக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் திட்டங்களுக்கும் தமிழ்நாடுதான் நிதி தந்து நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது. நீட் தேர்வு மூலமாக அடித்தட்டு மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவு சிதைக்கப்படுகிறது. தேசியக் கல்விக் கொள்கையானது இந்தித் திணிப்புக் கொள்கையாக மட்டுமே இருக்கிறது. தமிழ் வளர்ச்சிக்கு ஒதுக்கும் நிதியைவிட சமஸ்கிருதத்துக்குத் தரும் நிதி 17 மடங்கு அதிகமாக இருக்கிறது. தமிழர்களின் வரலாற்றுப் பெருமை வெளியில் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே கீழடி அறிக்கையை வெளியில் விடாமல் மறைக்கிறார்கள். இவை அனைத்துக்கும் மேலாக, தொகுதி மறுவரையறை என்ற பெயரால் தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நினைக்கிறார்கள். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் எந்தப் பிரச்சினை பற்றி அமித்ஷாவிடம் பேசினார் பழனிசாமி?**

“நான் மத்திய மந்திரி அமித்ஷாவை கள்ளத் தனமாகச் சந்தித்தேன் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சொல்லி இருக்கிறார். அமித்ஷா, இந்த நாட்டின் உள்துறை அமைச்சர். அவரைப் பார்க்கக் கூடாதா? தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகத்தான் அமித்ஷாவைச் சந்தித்தேன்” என்று, எதுவும் தெரியாத பிள்ளையைப் போல பேசி இருக்கிறார் பழனிசாமி. இதனை அவர் கட்சியினரும் நம்பவில்லை. அமித்ஷாவும் நம்ப மாட்டார்.

“சம்பாதித்ததைக் காப்போம்; சம்பந்தியைக் காப்போம்” என்பதுதான் பழனிசாமியின் பஸ் பயணம் என்று சமூக ஊடகங்களில் பரவி வருவதை பழனிசாமி பார்த்தாரா எனத் தெரியவில்லை. பழனிசாமியை மிரட்டிப் பணிய வைத்திருக்கிறது பா.ஜ.க. ஆனாலும் ‘பழனிசாமியை முதலமைச்சர் வேட்பாளராக’ ஒப்புக் கொள்ள பா.ஜ.க. தயாராக இல்லை. பா.ஜ.க., பழனிசாமியை நம்பவில்லை. பழனிசாமி, பா.ஜ.க.வை நம்பவில்லை. எனவே, இருவரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றும் ‘கழுத்தறுப்பு’க் கூட்டணியை அமைத்திருக்கிறார்கள். இதனைத் திசை திருப்புவதற்காகத் தான் ‘எனக்கு கண் வேர்க்குது’ என்ற பாணியில் பஸ் பயணத்தைத் தொடங்கி இருக்கிறார் பழனிசாமி.


**இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜனவரி மாதம் பழனிசாமியின் உறவினர்களுக்குச் சொந்தமான 26 இடங்களில் ரெய்டு நடந்தது. ‘எடப்பாடிக்கு செக் - உறவினர் வீட்டில் தொடரும் ஐடி ரெய்டு’, ‘எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் ஐந்தாவது நாளாக வருமான வரித்துறை ரெய்டு’, ‘எடப்பாடி உறவினர் வீட்டில் இறங்கிய ஐ.டி. அதிகாரிகள்’, ‘எடப்பாடி உறவினர் வீட்டில் விடிய விடிய ரெய்டு’, ‘கூட்டணிக்கு குறி வைக்கப்படுகிறாரா எடப்பாடி?’, ‘வசமாகச் சிக்கிய எடப்பாடி பழனிசாமியின் உறவினர்’, ‘எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் சிக்கியது என்ன?’, ‘ரூ.750 கோடி வரி ஏய்ப்பு செய்த எடப்பாடியின் உறவினர்’, ‘உறவினரின் வரி ஏய்ப்பு - எடப்பாடிக்கு சிக்கல்’, என்று ஊடகங்கள் அனைத்தும் செய்தி வெளியிட்டன. இதன் பிறகுதான் உள்துறை அமித்ஷா வீட்டுக் கதவைத் தட்டினார் பழனிசாமி.**

சட்டமன்றம் நடந்து கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு நாள் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, டெல்லி போனார். வெளிப்படையாகக் காரணம் சொல்லப்படவில்லை. டெல்லி விமானநிலையத்தில் நிருபர்கள் கேட்டபோது, “இங்கே எங்களுக்கு ஆபீஸ் இருக்கிறது, அதைப் பார்க்க வந்தேன், இது தெரியாம கேள்வி கேட்கிறீங்களே” என்று சலித்துக் கொண்டார் பழனிசாமி. ஆனால் மூன்று கார்களில் மாறி, உள்துறை அமைச்சர் வீட்டுக்குச் சென்றார் பழனிசாமி. உள்துறை அமைச்சர் வீட்டுக்கு இவ்வளவு ரகசியமாகச் செல்லத் தேவையில்லை. வெளிப்படையாகப் போகலாம். அவர் சொல்கிறாரே, ‘தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்கத் தேவையான’ கோரிக்கை மனுவை எடுத்துக் கொண்டு கூட அவர் சந்தித்திருக்கலாம். யாரும் அவரை தவறாகச் சொல்ல மாட்டார்கள்.

**அமித்ஷாவைச் சந்திக்க வரவில்லை என்று சொல்லி விட்டு, கார் மாறி மாறிச் சென்றதைத்தான், ‘கள்ளத்தனமாகச் சந்தித்தார் பழனிசாமி’ என்று துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சொல்கிறார்கள். இது தவறல்ல. இதுதான் உண்மை.**

முன்னாள் முதலமைச்சர், ஒரு மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய பழனிசாமி, உள்துறை அமைச்சரை எதற்காக வேண்டுமானாலும் சந்திக்கட்டும். அது அவரது விருப்பம். ஆனால் அதனை மறைத்தார், மறைக்க முயற்சித்தார். மாட்டிக் கொண்டார். இன்று அதனை மாற்றிப் பேசுகிறார் பழனிசாமி. ‘தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்காகப் போனேன்’ என்று சொல்லும் பழனிசாமி, என்ன பிரச்சினையைப் பேசினார் என்பதைச் சொல்ல வேண்டும். ஏதாவது ஒரு பிரச்சினையை உள்துறை அமைச்சர் அமித்ஷா தீர்த்து வைத்துள்ளாரா என்பதையும் சொல்ல வேண்டும்.

**அமித்ஷா - பழனிசாமி சந்திப்பால் தமிழ்நாட்டு மக்களின் ஏதாவது ஒரு பிரச்சினையாவது தீர்ந்து விட்டதா என்பதையும் நாம் ஆராய வேண்டும். பழனிசாமியின் ‘சம்பந்தி’ பிரச்சினை ஒருவேளை தீர்ந்திருக்கலாம். அதனைத்தான் ‘மக்கள்’ பிரச்சினை என்று சொல்கிறாரோ?**



அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.விக்னேஷ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலம்

# மாணவர்களின் 65 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ. 40.50 லட்சம் பரிசு!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி பேச்சு!

சென்னை, ஜூலை 18- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறையின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் நேற்று முன்தினம் (16.7.2025) அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாணவர்களின் 65 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.40.50 லட்சம் பரிசுத் தொகை வழங்கி 2 புதிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசியதாவது:

“ தமிழ்நாடு அரசின் EDII நிறுவனம் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் முனைவு பயிற்சியுடன் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் விதமாக நிதி உதவிகளை அளித்து வருகிறது. இன்று இந்த விழாவில், புத்தாக்க பற்றுசீட்டுதிட்டத்தின்கீழ் 15 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 மாணவ குழுக்களுக்கும் என மொத்தம் 65 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ.40 இலட்சத்து 50 ஆயிரம் உதவி தொகையும், பரிசுத் தொகையும், வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பரிசுகளை பெறும் அரசு பள்ளி மாணவர்கள் உள்ளிட்டபுதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்த கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புக்களான ரோபோ ரோடு ரோலர், பல்நோக்கு விவசாயக் கருவி, கப்பல் ஊழியர்களுக்கான பாதுகாப்பு பெல்ட், Sound Gun, அன்னாச்சிப்பழம் அறுவடைக் கருவி, மக்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் என பல்வேறு கண்டுபிடிப்புகள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

கல்வி, மருத்துவம், தொழில் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வரும் முதல்வர் அவர்கள் தொழில்துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன் விளைவாக தமிழ்நாடு இன்று இந்திய அளவில் அதிக தொழில் முதலீடுகளை ஈர்த்த மாநிலங்களில் முதல் மாநிலமாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவீதம் பெற்று முதலிடத்தில் உள்ளது. புத்தாக்கத் தொழில்கள் தரவரிசையில் முதல் இடத்தில் உள்ளது. புத்தாக்க சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்கள் - மாணவர்களுக்கு EDII நிறுவனம் மூலம் மாவட்ட தலைநகரங்கள், கல்லூரிகள், பள்ளிகள், வட்டார அளவிலும் தொழில் முனைவு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. கழக அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 71 ஆயிரத்து 735 நபர்களுக்கு தொழில்முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு 19 ஆயிரம் நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பள்ளி மாணவர்கள் கல்வியில் மட்டும் அல்லாமல் புதிய கண்டுப்பிடிப்புகளை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் “பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை” அறிவித்தார். கடந்த 3 ஆண்டுகளில் 8 ஆயிரத்து 74 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 21 லட்சத்து 86 ஆயிரம் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. புத்தாக்க தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 லட்சத்து 40 ஆயிரத்து 820 கல்லூரி மாணவர்களுக்கும், அரசு கல்லூரிகளில் உள்ள Incubation Centres மூலம் 1 லட்சத்து 45 ஆயிரம் மாணவர்களுக்கும் என இதுவரை 7 லட்சத்து 85 ஆயிரம் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க இளைஞர்களுக்கு கழக அரசு உதவி தொகையினை புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புக்காக வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை நடப்பாண்டு முதல் ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 3 லட்சமாகவும், அவற்றை தயாரித்துசந்தைப்படுத்த வழங்கப்படும் உதவித்தொகை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ. 7 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ், 470 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 12 கோடியே 10 லட்சம் உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் StartUp நிறுவனங்களை உருவாக்க, புத் தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை169 நிறுவனங்களில் ரூ.18 கோடியே 79 லட்சம் முதலீடும், 36 SC / ST Start Up நிறுவனங்களில் ரூ.51 கோடியே 20 லட்சம் முதலீடும், ஆக மொத்தம், கடந்த 4 ஆண்டுகளில் 205 StartUp நிறுவனங்களில், ரூ. 69 கோடியே 99 லட்சம் தமிழக அரசு முதலீடு செய்துள்ளது. இந்த திட்டத்திற்காக நடப்பு நிதி நிலை அறிக்கையில், ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால் ஆட்சி பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் ரூ. 2 ஆயிரத்து 20 கோடியே 96 லட்சம் மானியத்துடன், ரூ.5 ஆயிரத்து 180 கோடியே 18 லட்சம் வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டு, 59 ஆயிரத்து 584 நபர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2G, 3G, 5G என உலகம் வேகமாக முன்னேறி கொண்டிருக்கும் காலத்தில் நம் மாணவர்களும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து மக்களின் தேவையினை புரிந்து தரமான பொருட்களை குறைந்த விலையில் உருவாக்கிட வேண்டும் என கேட்டுக் கொண்டு, உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் பயிற்சிகள் நிதி உதவிகள் வழங்க அரசு தயாராக உள்ளது. உங்கள் புதிய கண்டுபிடிப்புகளால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சிக்கு முன் மாணவ மாணவியர்களின் புதிக கண்டுப்பிடிப்புக்களின் கண்காட்சியினை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

## தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க.-வுடன், அ.தி.மு.க. கூட்டணி வைத்தது ஏன்?

# அ.தி.மு.க.வுடன் கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் கூட்டணி வைக்காது!


## எடப்பாடி பழனிசாமிக்கு இந்திய கம்யூனிஸ்ட் முத்தரசன் பதிலடி!

சென்னை, ஜூலை 18 - தமிழ்நாட்டை தொடர்ந்து பா.ஜ.க. வஞ்சித்து வரும் நிலையில், அந்த கட்சியுடன் கூட்டணி வைத்தது மூலம், தமிழ்நாட்டை அ.தி.மு.க. வஞ்சித்து விட்டதாக, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் குற்றம் சாட்டியுள்ளார். அ.தி.மு.க.வுடன் கூட்டணி கிடையாது எனவும், தேசிய கல்விக் கொள்கையில் எடப்பாடி பழனிசாமியின் நிலைப்பாடு என்ன? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போன வாரம் வரை, கம்யூனிஸ்டுகளை விமர்சித்த எடப்பாடி பழனிசாமி, இந்த வாரம் கூட்டணிக்கு அழைப்பு விடுப்பது நகைச்சுவையாக உள்ளதாக விமர்சித்தார். தமிழ்நாட்டை தொடர்ந்து பா.ஜ.க. வஞ்சித்து வரும் நிலையில், அந்த கட்சியுடன் கூட்டணி வைத்தது மூலம், தமிழ்நாட்டை அ.தி.மு.க. வஞ்சித்து விட்டதாக குற்றம் சாட்டினார். பா.ஜ.க.வுடன் இனி ஒருபோதும் கூட்டணி கிடையாது என, ஜெயலலிதா கூறிய நிலையில், இப்போது பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்தது என்பது குறித்து பழனிச்சாமி விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் முத்தரசன் தெரிவித்தார்.



தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் குறித்து பிரதமர் மோடியிடம் எடப்பாடி பழனிசாமி பேசுவாரா? என்று கேள்வி எழுப்பிய முத்தரசன், தேசியக்கல்விக் கொள்கை விவகாரம், மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் ஆகிய விவகாரங்களில் அ.தி.மு.க.வின் நிலைப்பாடு குறித்து எடப்பாடி பழனிசாமி தெளிவுப் படுத்தவேண்டும் என்று கூறினார்.



தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் நேற்று (17.7.2025) சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி செண்பகராமன், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.